**INTERNATIONAL INDIAN SCHOOL DAMMAM**
**MIDDLE SECTION**
**ANNUAL EXAM WORKSHEET (25-26)**

**SUBJECT: TAMIL** **CLASS: VII**

---

## பகுதி - அ

**கீழேவரும் பத்தியை படித்து, இதனைத் தொடர்ந்து வரும் வினாவுக்கு சரியான விடையை எழுதுக .**

அரசருக்குரிய அங்கங்களுள் தலைசிறந்தது படைத்திறத்தால் அரசன் உட்பகையை அழிப்பான். முன்னாளில் தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என்னும் நாற்படையுடைய அரசன் மிகச் சிறந்தவனாக மதிக்கப்பெற்றான். நால் வகைப் படைகளில் ஏற்றமும், தோற்றமும் பெற்றது யானைப்படை.
போர்க்களத்தில் வீறுகொண்டு செம்போர் விளைப்பதும், மாற்றார்க்குறிய மாட மதில்களைத் தாக்கித் தகர்ப்பதும் யானைப்படையே ஆகும். வலிமை சான்ற அழகிய யானை, பட்டத்து யானை என்று பெயர் பெற்றது. உயர்ந்த மேனியும், ஓங்கிய நடையும், சிறந்த கொம்பும், பரந்த அடியும், சிறிய கண்ணும், செந்நிற வாயும் உடைய யானையே அப்பதவிக்கு உரியதாக தேர்ந்தெடுக்க பட்டது.

**வினாக்கள**

1. நால்வகைப் படைகளில் ஏதேனும் ஒன்றினை எழுதுக?
2. நால்வகைப் படைகளில் ஏற்றமும் தோற்றமும் பெற்றது எது?
3. அரசன் எதை அழிப்பான்?
4. வலிமை சான்ற அழகிய யானை எப்படி பெயர் பெற்றது ?
5. ஓங்கிய நடையும், சிறந்த கொம்பும், பரந்த அடியும், சிறிய கண்ணும், செந்நிற வாயும், உடையது எது?

## பகுதி - ஆ ( இலக்கணம் )

**போலி**

**அ)கூறியவாறு செய்க**

1) அரைசன் (எவ்வகைப்போலி )

2) நிலம் (போலி ஆக்குக ) --

3) அறன் (போலி நீக்கி எழுதுக ) --

4) மைஞ்சு (போலி நீக்கி எழுதுக )--

**ஆ பொருத்தமான இலக்கணக் குறிப்பினைத்** எழுதுக

1) அஞ்சு

2) முன்றில்

3) இலைஞ்சி

**இ) கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1) ஓர் எழுத்து நிற்க வேண்டிய இடத்தில் மற்றோர் எழுத்து வந்து பொருள் மாறாமல் நின்றால், அது ______________ எனப்படும்.

2) போலி __________________ வகைப்படும்.

3) முதல், இடை, கடை எழுத்துகள் மாறி வந்தும் பொருள் மாறாமல் நிற்பது

_________________________

4) ஈற்றுப்போலி என அழைக்கப்படுவது__________________ஆகும்.

## அறுவகைப் பெயர்கள்

**அ)அடைப்புக்குறிக்குள் கூறியவாறு செய்க**

1) வெண்ணிலா (பண்புப்பெயரை எடுத்து எழுதுக )

2) சித்திரைத் திருவிழா (காலப்பெயரை எடுத்து எழுதுக )

3) நான் கடற்கரைக்குச் சென்றேன் ( இடப்பெயரை எடுத்து எழுதுக )

4) கிளி அழகானது (பண்புப்பெயர் சேர்த்து எழுதுக )

5) குழி (பண்புப்பெயர் சேர்த்து எழுதுக )

**ஆ.கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1) காலத்தின் பெயரைக் குறிப்பது __________________

2) திருச்சிராப்பள்ளி என்பது ________________

3) பெயர்ச்சொல்________________ வகைப்படும்.

**இ)பொருத்தமான இலக்கணக் குறிப்பினைத் தேர்ந்தெடு.**

1) கருங்குயில்

2) கபாலம்

3) மைதானம்

4) தை

5) பாடினாள்

# பண்புப்பெயர்

**கொடுக்கப்பட்டுள்ள தொடர்களைப் பிரித்து, அவற்றிலுள்ள பண்புப்பெயர்கள்எந்த வகையைச் சேர்ந்தவை எனக் குறிக்க.**

1)செங்காலன்னம் - செம்மை + கால் + அன்னம் **--** _______________________________

2)ஆறுமுகத்தான் ஆறு + முகத்தான் **--** ____________________________

3) வட்டப்பாதை - வட்டம் + பாதை -- ______________________________

4 ) நற்செயல் - நன்மை + செயல் -- ___________________________________

5 ) இன்சுவை - இனிமை + சுவை -- ___________________________________

## எண்களின் பெயர்களை எழுதுக:

1. 409 –
2. 84210 –
3. 3999 –
4. 740000 –
5. 674316 –

## மரபு வழு

### மரபு வழு நீக்கி எழுதுக

1) பால் குடி

2) புலிக்குட்டி

3) தீ வை

4) கோழி கூவும்

5) தாழை இலை

6) கமுகு இலை

7 ) குதிரை கத்தும்

## வழு

### அ) கீழ் காண்பவை எவ்வகை வழு எனக் கூறுக.

1) நாளை வந்தாள்

2) தருமன் உண்டாள்

3) கீரிக்குட்டி

4) நான் கேட்டாய்

5) முட்டையிட்டது கோழியா ? சேவலா?

6) கண்ணகி சிரித்தான்

7)மாதவி கேட்டான்

**ஆ அடைப்புக்குறிக்குள் கூறியவாறு செய்க.**

1)நீ பாடினாய்( இட வழு ஆக்குக )

2)குமணன் படித்தாள் ( வழு நீக்கி எழுதுக )

3)மாணவர்கள் ஓடினர் ( பால் வழு ஆக்குக )

4)கூவியது குயில். மயில் அல்ல. ( வினா வழு ஆக்குக )

5) வெண்மையானது புறா. காக்கை அல்ல. (வினா வழு ஆக்குக )

6)சோழன் வென்றான் (பால் வழு ஆக்குக )

**சரியான சொற்றொடரை தேர்வு செய்க:-**

1.அ. ஈற்றுப்போலி என அழைக்கப்படுவது இடைப்போலி

ஆ. ஈற்றுப்போலி என அழைக்கப்படுவது கடைப்போலி

இ. ஈற்றுப்போலி என அழைக்கப்படுவது முதற் போலி

ஈ. ஈற்றுப்போலி என அழைக்கப்படுவது முற்றுப்போலி

2.அ. நாற்காலி என்பது தொழிற்பெயர்

ஆ. நாற்காலி என்பது காலப்பெயர்

இ.நாற்காலி என்பது பொருட்பெயர்

ஈ. நாற்காலி என்பது இடப்பெயர்

3.அ. செல்வி பாடினான் என்பது இடவழு.

ஆ. செல்வி பாடினான் என்பது மரபு வழு.

இ. செல்வி பாடினான் என்பது பால்வழு.

ஈ. செல்வி பாடினான் என்பது திணை வழு.

## பகுதி - இ (உரைநடை மற்றும் செய்யுள் )

### திருக்குறள்

**பொருள் எழுதுக** :-

ஆன்ற –

நயன் -

புக்கு -

**அ. சரியான சொல்லைத் தெரிவு செய்க** :-

1. 'ஆன்ற' இச்சொல்லின் பொருள் ______________
2. பெருஞ்செல்வம் - அச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________
3. பண்புடைமை – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________
4. அது + இன்றேல் - இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ________
5. பாடலில், நேர்மை என்னும் பொருள் தரும் சொல் _____________

**ஆ.பிரித்தெழுது** :-

அ. இவ்விரண்டும் -

ஆ. மக்கட்பண்பு -

**இ.பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக**:

**ஊ. விடையளி** :-

1. பண்புடையவராக வாழ்வதற்குரிய நல்ல செயல்கள் யாவை ?
2. 'மரம் போன்றவர்' எனத் திருக்குறள் யாரைக் குறிப்பிடுகிறது ?
3. பண்பில்லாதவன் பெற்ற செல்வம் எவ்வாறு பயனிலாது போகும் ?

**அடிமாறாமல் எழுதுக.**

1. **"நயனொடு"** எனத் தொடங்கும் குறட்பாவை எழுதுக.
2. **"அரம்போலும்"** எனத் தொடங்கும் குறட்பாவை எழுதுக.
3. **"திரிந்தற்று"** எனத் முடியும் குறட்பாவை எழுதுக.

### உரைநடை – வாரித் தந்த வள்ளல்

**பொருள் கூறுக.**

1. ஐயன் -
2. கொற்றவன் -
3. கோமகன் -
4. வறுமை -

5. இல்லாள் -
6. துயர் -
7. குன்றாப் புகழ் -
8. சுற்றத்தார் -

**அ. சரியான சொல்லைத் தெரிவு செய்க** :-

1. பொற்காசு - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ___________
2. கொடைத்திறம் - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ___________
3. களிறு – என்பது ___________ யைக் குறிக்கும்.
4. தரணி - இச்சொல்லின் பொருள் ___________
5. சோறு - இச்சொல்லுடன் பொருந்தாதது ___________

    அ. உணவு

    ஆ. அமுது

    இ. அன்னம்

    ஈ. கல்

**ஆ. பொருத்துக** :-

1. பேழை - பெட்டி
2. மாரி - மழை
3. வாயில் - வாசல்
4. ஆணை - கட்டளை
5. இரவல் - கடன்

**இ. விடையளி** :-

1. பாணனின் குழந்தைகள் பசியால் வாடக் காரணம் என்ன ?
2. வல்வில் ஓரியின் சிறந்த பண்பு யாது ?
3. பரிசு பெற்ற பாணன், மன்னனை எவ்வாறு வாழ்த்தினான் ?

**பிறமொழிச் சொற்கள் கலவாமல் எழுதுக** :-

1. என்னுடைய புக் டேபிளில் உள்ளது

2. நான் டிவியில் நியூஸ் பார்த்தேன்.

3. தை மாதம் பர்ஸ்ட் நாள் பொங்கல் பெஸ்டிவெல் கொண்டாடினான்.

4. பாலன் ஸ்நாக்ஸ் சாப்பிட்டான்.

**தொடர் அமைக்க** :-

1. பொருளுதவி :-
2. திறமைசாலி :-
3. நம்பிக்கை :-
4. வான்புகழ் :-

## செய்யுள் - சிறுபஞ்சமூலம்

**பொருள் கூறுக** :-

வனப்பு -

கண்ணோட்டம் -

இத்துணை -

வாட்டான் -

பண்

**அ. சரியான சொல்லைத் தெரிவு செய்க** :-

1. நன்றென்றல் - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ___________
2. என்று + உரைத்தல் - இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ___________
3. கண்ணுக்கு அழகு ___________

**ஆ. பொருத்துக** :-

1. கண்ணுக்குஅழகு -
2. காலுக்கு அழகு -
3. ஆராய்ச்சிக்கு அழகு -
4. இசைக்கு அழகு -
5. அரசனக்கு அழகு -

**இ. பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக**:

--------------------------- ---------------------------

--------------------------- ---------------------------

**ஈ. விடையளி**:-

1. கண்ணுக்கு எது அழகு ?
2. காலுக்கு எது அழகைத் தருகிறது ?
3. அரசனுக்கு அழகைத் தருவது எது ?

உ. “கண்வனப்புக்” எனத் தொடங்கும் சிறுபஞ்சமூலப் பாடலை எழுதுக.

## செய்யுள் - உழவுப்பொங்கல்

**பொருள் எழுதுக** :-

எங்கணும் -

ஏர்த்தொழில் -

விழலாகும் -

களித்து -

இசைந்து -

**அ. சரியான சொல்லைத் தெரிவு செய்க** :-

**1.** நலனெல்லாம் - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________

**2.** நிறைந்தறம் - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________

**4.** 'இன்பம்' - இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல் ________

**ஆ. பாடலில் முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எழுதுக** :-

__________ __________ __________ __________

**உ. விடையளி** :-

1. அனைவரும் இன்பமுடன் வாழத் தெம்புதரும் தொழில் எது?
2. உழவுத் தொழிலால் என்னென்ன நன்மைகள் ஏற்படுகின்றன ?
3. பொங்கலை நாம் எவ்வாறு கொண்டாட வேண்டுமெனக் கவிஞர் கூறுகிறார் ?

## உரைநடை – விதைத் திருவிழா

**அ. சரியான சொல்லைத் தெரிவு செய்க** :-

1. அனுமதி - இச்சொல் குறிக்கும் பொருள் __________
2. விளம்பரத்தாள்கள் - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது -------------
3. ஆலோசித்தல் - இச்சொல்லுக்குரிய பொருள் __________
4. வழிபாடு + கூட்டம - இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது --------
5. பழங்காலம் - இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல் ____________

**ஈ. நிரப்புக** :-

அ. விதைத்திருவிழாவில் அமைக்கப்பட்டிருந்த அரங்குகளின் எண்ணிக்கை ------------------------

ஆ. விதைகள ______________ ஆனவையாக இருத்தல் வேண்டும்.

இ. கொண்டைக்கடலை என்பது ____________________ ஒன்று.

**உ. விடையளி** :-

1. மாணவர்களை எங்கே அழைத்துச் செல்வதாகத் தலைமையாசிரியர் கூறினார் ?
2. ஆசிரியர் வழங்கிய துண்டு விளம்பரத்தாளில் என்ன செய்தி இருந்தது ?
3. 'பாதிப்பு' என்று எழுதப்பட்ட அரங்கில் என்ன செய்தி சொல்லப்பட்டது ?
4. நவதானியங்கள் எவை ?

**கடிதம்:**

1.குடிநீர் வசதி செய்து தர வேண்டி பஞ்சாயத்து தலைவருக்குக் விண்ணப்ப கடிதம் ஒன்று எழுதுக.

2.விடுமுறையை கழிக்க வருமாறு நண்பனுக்கு கடிதம் எழுதுக.

**பின்வரும் தலைப்பில் கட்டுரை எழுதுக:**

பொங்கல் திருவிழா - முன்னுரை - போகிப் பண்டிகை - பொங்கல் விழா - மாட்டுப் பொங்கல் - காணும் பொங்கல் - முடிவுரை என்ற குறிப்புகளை கொண்டு கட்டுரை எழுதுக.

**பின்வரும் தலைப்பில் துணைப்பாட கட்டுரை எழுதுக:**

'தலைமைப் பண்பு'

**********************